Nestlé Good food, Good life

# பத்திரிகைச் செய்தி

கொழும்பு, டிசம்பர் 6, 2021

## *Nestomalt* SALARY for LIFE போட்டியின் இரண்டாவது வெற்றியாளர் அறிவிக்கப்பட்டுள்ளார்

**திருமதி. டி. டி. எம். தலாகல அவர்கள் 55 வயது வரை மாதந்தோறும் ரூபா 50,000 தொகையைப் பெற்றுக்கொள்வார்**

*நெஸ்டமோல்ற்று* தனித்துவமாக முன்னெடுத்து வருகின்ற நுகர்வோர் ஊக்குவிப்பான 'SALARY for LIFE' 2021 போட்டியின் இரண்டாவது வெற்றியாளரின் விபரங்களை அறிவித்துள்ளது. தம்புள்ளையைச் சேர்ந்த, 29 வயது நிரம்பிய, ஒரு பிள்ளையின் தாயான திருமதி. டி. டி. எம். தலாகல அவர்கள் இந்த ஆண்டின் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், போட்டியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, 55 வயது வரை *நெஸ்டமோல்ற்றிடமிருந்து* மாதந்தோறும் ரூபா 50,000 தொகையைப் பெற்றுக்கொள்வார். தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் முன்னெடுக்கப்பட்ட *Nestomalt* 'SALARY for LIFE' போட்டியானது விசுவாசம் மிக்க தனது வாடிக்கையாளர்கள் தமது இலட்சியங்களை நனவாக்கி, வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்கான பயணத்தை ஆரம்பிக்க உதவுவதற்கான அத்திவாரத்தை அவர்களுக்கு வழங்குகின்றது.

"ஒரு தொழிலதிபராக மாறி, நிர்மாணத் தொழிற்துறையில் எனது பெயரை முத்திரை பொறித்துக் கொள்வதே எனது அவா. ஆகவே, *Nestomalt* 'SALARY for LIFE' போட்டியில் வென்றுள்ளமை, எனதும், எனது குடும்பத்தினதும் கனவை நனவாக்கியுள்ளது. சொந்த வியாபாரத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற எனது வாழ்வின் நீண்ட நாள் இலட்சியத்தில் ஒரு படி முன்னேறுவதற்கு வழிவகுத்த நெஸ்டமோல்ற்றுக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன்," என்று திருமதி. டி. டி. எம். தலாகல அவர்கள் குறிப்பிட்டார்.

*Nestomalt* 'SALARY for LIFE' போட்டியின் அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பிற்குத் தகைமை பெறுவதற்கு 18 முதல் 50 வயதிற்குட்பட்ட நுகர்வோர் 400 கிராம் நெஸ்டமோல்ற்று பக்கெட்டின் மேலுறையை அனுப்பி வைத்தல் வேண்டும். எழுந்தமானமாக ஒரு வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டு, போட்டியின் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக, 55 வயது வரையில் நெஸ்டமோல்ற்றிடமிருந்து மாதந்தோறும் ரூபா 50,000 தொகையைப் பெற்றுக்கொள்வார்.

"நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முதன்மையான வர்த்தகநாமமான *நெஸ்டமோல்ற்று*, 60 ஆண்டுகளுக்கும் மேலாக, இலங்கைக் குடும்பங்களின் முன்னேற்றத்தை நேர்மறையான வழியில் மேம்படுத்தியுள்ளது. எமது மற்றுமொரு நுகர்வோருக்கு தனது இலட்சியத்தை வலுவாக முன்னெடுத்துச் செல்வதற்கான பயணத்தை ஆரம்பிக்க உதவ முடிந்துள்ளமை எமக்கு பெரும் மகிழ்ச்சியளிக்கின்றது. எமக்கு கிடைக்கப்பெற்ற பெரும் எண்ணிக்கையிலான நுழைவு விண்ணப்பங்கள் எமக்கு மிகுந்த உற்சாகம் அளிப்பதுடன், வாழ்வை மாற்றும் இப்போட்டியை எதிர்வரும் ஆண்டுகளிலும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல எண்ணியுள்ளோம்," என்று நெஸ்லே நிறுவனத்தின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான துணைத் தலைமை அதிகாரியான ருவான் வெலிக்கல அவர்கள் குறிப்பிட்டார்.

"எத்தனையோ ஆண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக, இலங்கை மக்களின் வாழ்விற்கு நெஸ்டமோல்ற்று மகத்தான பங்களிப்பாற்றி வந்துள்ளது. நெஸ்டமோல்ற்று மரதன், புத்தி பிரபோதய (Buddhi Prabhodaya) மற்றும் விசேடமாக SALARY for LIFE போன்ற முயற்சிகளின் மூலமாக நுகர்வோரின் வாழ்வில் முன்னேற்றம் காண உதவி, நேர்மறையான மாற்றத்திற்கான வழிகாட்டியாக இந்த வர்த்தகநாமம் திகழ்ந்து வருவதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்," என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்சென்யா அவர்கள் குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் நிலைபெற்றுள்ளதுடன், 50 ஆண்டுகளுக்கும் மேலாக குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுத்து அவர்கள் சுவைத்து மகிழும் நாமமாக *நெஸ்டமோல்ற்று* மாறியுள்ளது. நெஸ்லே லங்கா நிறுவனத்தால் பிரத்தியேகமாக

இலங்கையில் தயாரிக்கப்படுவதுடன், நாட்டில் மிகவும் அபிமானம் பெற்ற, புகழ்பூத்த மோல்ற்று அடங்கிய பானமாகவும் திகழ்ந்து வருகின்றது. அத்துடன், உடலுக்கும், உள்ளத்துக்கும் தெம்பூட்டுவதற்கு மோல்ற்று அடங்கிய பார்லியின் நலச்செழுமை, பால் மற்றும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் நிரம்பியது.

---

**தொடர்புகளுக்கு:**



| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |